கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட/இரண்டாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு – 2014/2015
(மார்ச்/ஏப்ரல் 2017)

# PY 1212 History & Basic Concepts of Formal Logic

நேரம் : 02 மணித்தியாலங்கள்

**பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி – II இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவுசெய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

---

## பகுதி – I

01. (I) எடுப்பு முரண்பாட்டு அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் வாதங்களின் வாய்ப்பினைத் தீர்மானிக்குக.

(அ) ஒவ்வொரு நாய்களும் காட்டில் வாழ்வது இல்லை என்ற எடுப்பு பொய்யெனத் தரப்பட்டுள்ளது. ஏனெனில் சில நாய்கள் காட்டில் வாழ்கின்றன.

(ஆ) பறவைகள் மட்டுமே நீந்துகின்றன என்பது பொய் ஆகவே எல்லா நீந்துவனவும் பறவைகள் அல்ல என்பது பொய்.

(இ) நல்லவர்கள் சிலரேனும் வகுப்பில் இல்லை ஏனெனில் வகுப்பில் உள்ள சிலரேனும் நல்லவராவார்.

(3x3=9 புள்ளிகள்)

(II) எடுப்பு முரண்பாட்டு அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் எடுப்புக்களின் உண்மைப் பெறுமானத்தினை தீர்மானிக்குக.

(அ) சில பறவைகள் ஏனும் பறப்பதில்லை என்ற எடுப்பு உண்மையாக அமைந்தால்,
- (i) எல்லா பறவைகளும் பறப்பதில்லை
- (ii) சில பறவைகள் பறப்பன
- (iii) பறவைகள் பறப்பன

(ஆ) நாணம் உடையவர்கள் பெண்கள் என்ற எடுப்பு பொய்யாக அமைந்தால்
- (i) சில நாணம் உடையவர்கள் பெண்கள் அல்லர்
- (ii) சில நாணம் உடையவர்கள் பெண்கள்
- (iii) எந்த நாணம் உடையவர்களும் பெண்கள் அல்லர்

(2x3=6 புள்ளிகள்)

(III) மறுதலை முரண்பாடு, உப மறுதலை முரண்பாடு என்பவற்றை விளக்குக.

(07 புள்ளிகள்)

(IV) “எதிர்மறை முரண்பாடு பூரண முரண்பாடாகும்” விளக்குக.

(08 புள்ளிகள்)

02. I. வெளிப்பேற்றின் அடிப்படையில் கீழ்வரும் வாதங்களின் வாய்ப்பினை துணிக.

(அ) பறக்காதவை நடக்காதவை ஆகும். ஏனெனில் சில நடப்பன பறக்காதவை அல்ல.

(ஆ) ஒரு வீரமானவை ஏனும் பயங்கரமானவை அல்ல என்பது எந் பயங்கரமானவையும் வீரமானவை அல்ல என்பதிலிருந் பெறப்படும்.

(இ) எல்லா குதிரைகளும் வேகமாக ஓடுவன ஆகவே எல்லா குதிரைகளும் வேகமாக ஓடாமலில்லை.

(ஈ) எல்லா வண்ணத்துப்பூச்சிகளும் அழகியன ஆகவே எந் அவலட்சணமானதும் வண்ணத்துப்பூச்சியாய் அல்லாமல் இல்லை.

(உ) சில நாய்கள் குரைப்பதில்லை ஆகவே குரைக்காதவை சி நாய்கள்.

(5x3=15 புள்ளிகள்

II. குரங்குகள் நீந்தாதவை என்ற எடுப்பிற்கான நேர்மாற்றத்தினை நிகழ்த்திக் காட்டுக.

(05 புள்ளிகள்

III. A எடுப்பின் எதிர்மாற்றம் ஏன் (A) எடுப்பாக இல்லை I எடுப்பா உள்ளது.

(05 புள்ளிகள்

IV. குறை எடுப்பினை நேர்மாற்றம் செய்ய முடியாதிருப்பதேன் என்பதனைக் கூறுக.

(05 புள்ளிகள்

03. I. பின்வரும் வாதங்களை நியாயத்தொடையின் அடிப்படையில் அத வாய்ப்பு, வாய்ப்பின்மையை தீர்மானிக்குக. வாதம் வாய்ப்பற்றதாயி மீறப்பட்டுள்ள விதிகளையும், போலிகளையும் குறிப்பிடுக. வாத வாய்ப்பானதாயின் அதனை வென்வரை படத்தின் மூலம் காட்டுக.

(அ) எல்லா அரசாங்க ஊழியர்களும் நாட்டிற்கு சேவையாற்றினாலு நாட்டிற்கு சேவையாற்றிய ஒருவரேனும் மதிக்கப்படுவதில்லை ஆகவே அரசாங்க ஊழியர்கள் மதிக்கப்படுவதில்லை.

(ஆ) தேர்வு நாடிகள் மட்டுமே விளையாடுபவராயின் விளையாடுபவ மட்டுமே சித்தியடைவாராயின் எந்த தேர்வு நாடியு சித்தியடையமாட்டார் என முடிவு செய்யலாம்.

(இ) மாணவர்கள் புத்தியற்றவர்கள் ஏனெனில் எல்ல ஆய்வறிவாளர்களும் முயற்சியுள்ளவர்கள் அல்லர் அத்துட முயற்சியுள்ள எவரும் மாணவர்கள் அல்லர்.

(ஈ) சமூக விஞ்ஞானிகள் இயற்கை விஞ்ஞானிகளைப் போ சோதனைகள் செய்யாததினால் சமூக விஞ்ஞானிகள் இயற்கை விஞ்ஞானிகள் அல்ல.

(உ) எல்லா யானைகளும் கருணையுடையன அல்ல எல்லா யானைகளும் புல்லை உண்பவை எனவே புல்லை உண்ப மட்டுமே கருணையுடையன.

(5x4=20 புள்ளிகள்